**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திரு. K. சீனிவாசன், எம்., ஏ., எல்.எல்.எம்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

(திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் மாசி மாதம் 25 ம் நாள்)

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் வியாழக்கிழமை

CNR:NO: TNNG03-0000369-2021

**இந்து திருமண அசல் மனு எண்.98/2021**

தனபால் ......................மனுதாரர்

..எதிர்..

D. மகேஸ்வரி .................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 13.02.2023 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. வைரவநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்கு நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி சார்வாகாத நிலையில் நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவிடப்பட்டு, நாளிதழ் விளம்பரம் கொடுக்கப்பட்டும் எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......................

**ஆணையுரை**

மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென கோரியும், இம்மனுவின் செலவுத்தொகையை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கொடுக்க உத்தரவிட கோரியும், இதர பரிகாரங்களை வழங்க கோரியும், இந்து திருமண சட்டம் பிரிவு 9-ன்படி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

I. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

எதிர்மனுதாரர் மனுதாரரின் மனைவி என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 20.10.2013 அன்று கீழ்வேளூர் தாலுக்கா, விழுந்தமாவடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மழைமுத்து மாரியம்மன் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் மனுதாரர் இல்லத்தில் குடும்பம் நடத்திய வகையில் லிரிஷ் (8 வயது) ஆண்குழந்தை உள்ளது என்றும், திருமண காலத்தில் மனுதாரர் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல்

K SRINIVASAN
Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:12:30 +0530

ரூ.3,00,000/- செலவு செய்து எதிர்மனுதாரரை திருமணம் செய்துள்ளார் என்றும், திருமணம் நடைபெற்ற 8 ஆண்டுகளில் எதிர்மனுதாரர், மனுதாரருடன் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்துள்ளார் என்றும், மனுதாரர் 14.11.2019 ல் இந்தியாவிலிருந்து மலேசியா செல்லும் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், மனுதாரர் மலேசியா சென்றபிறகு மனுதாரரின் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டு கடந்த 20.11.2020 ல் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றவர் அங்கேயே தங்கிவிட்டார் என்றும், மனுதாரர் 27.08.2020 ல் இந்தியா வந்தபிறகு எதிர்மனுதாரரை அழைத்து வந்து குடும்பம் நடத்த நடவடிக்கை எடுத்தபோது எதிர்மனுதாரர் வருவதாக சொல்லி வீண்காலதாமதம் செய்து வந்தார் என்றும், அதன்பிறகு எதிர்மனுதாரர் சிங்கப்பூர் நாட்டிற்கு வேலைக்கு போவதற்கு மனுதாரரிடம் அனுமதி கேட்டபோது மனுதாரர் மறுத்ததால் ஆத்திரமடைந்த எதிர்மனுதாரர் எவ்வித காரணமுமின்றி பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர், எதிர்மனுதாரரை பலமுறை நேரிலும், அலைபேசியிலும் அழைத்தும் எதிர்மனுதாரர் வீண்சால்சாப்பு சொல்லி காலதாமதம் செய்து வந்தநிலையில் இந்நீதிமன்றத்தில் HMOP.No.13/2021 என்ற விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் குழந்தையின் நலனை கருத்தில்கொண்டு எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ எப்போதும் தயாராகவே இருந்து வருகிறார் என்றும், எனவே எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

II. மனுதாரரின் மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி சார்வாகாத நிலையில் நாளிதழில் விளம்பரம் செய்ய உத்தரவிடப்பட்டு, நாளிதழ் விளம்பரம் கொடுக்கப்பட்டும் எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் கடந்த 13.09.2022 அன்று ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

III. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>

1) மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

K SRINIVASAN

Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:12:41 +0530

2) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ 3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

IV. **பிரச்சனைக்கான தீர்வு**

(1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும்விதமாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில், எதிர்மனுதாரர் மனுதாரரின் மனைவி என்றும், தனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 20.10.2013 அன்று கீழ்வேளூர் தாலுக்கா, விழுந்தமாவடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மழைமுத்து மாரியம்மன் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் மனுதாரர் இல்லத்தில் குடும்பம் நடத்திய வகையில் லிரிஷ் (8 வயது) ஆண்குழந்தை உள்ளது என்றும், திருமணம் நடைபெற்ற 8 ஆண்டுகளில் எதிர்மனுதாரர், தன்னுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்தி வந்துள்ளார் என்றும், கடந்த 14.11.2019 அன்று தான் இந்தியாவிலிருந்து மலேசியா சென்றபிறகு எதிர்மனுதாரர், தனது பெற்றோர்களிடம் சொல்லிவிட்டு கடந்த 20.11.2020 ல் பெற்றோர் வீட்டிற்கு சென்றவர் அங்கேயே தங்கிவிட்டார் என்றும், தான் 27.08.2020 ல் இந்தியா வந்தபிறகு எதிர்மனுதாரரை அழைத்து வந்து குடும்பம் நடத்த நடவடிக்கை எடுத்தபோது எதிர்மனுதாரர் வருவதாக சொல்லி வீண்காலதாமதம் செய்து வந்தார் என்றும், அதன்பிறகு எதிர்மனுதாரர் சிங்கப்பூர் நாட்டிற்கு வேலைக்கு போவதற்கு தன்னிடம் அனுமதி கேட்டு தான் மறுத்ததால் ஆத்திரமடைந்த எதிர்மனுதாரர் எவ்வித காரணமுமின்றி பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறார் என்றும், தான் எதிர்மனுதாரரை பலமுறை நேரிலும், அலைபேசியிலும் அழைத்தும் எதிர்மனுதாரர் வீண்சால்சாப்பு சொல்லி காலதாமதம் செய்து வந்தநிலையில் இந்நீதிமன்றத்தில் HMOP.No.13/2021 என்ற விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், தனது குழந்தையின் நலனை கருத்தில்கொண்டு எதிர்மனுதாரருடன் தான் சேர்ந்து வாழ எப்போதும் தயாராகவே இருக்கிறேன் என்றும், எனவே எதிர்மனுதாரர், தன்னுடன் சேர்ந்து

K SRINIVASAN
Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:13:00 +0530

வாழ உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

(2) மனுதாரரின் சாட்சியம் மற்றும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதும், இருவருக்கும் லிரிஸ் என்ற ஆண்குழந்தை உள்ளது என்பதும், எதிர்மனுதாரரின் நடவடிக்கைகளால் மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. அதற்கு ஆதரவாக 20.10.2013 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு சார்வு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(3) இந்நீதிமன்றத்திலிருந்து எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட பிறகும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை மறுத்து எவ்வித எதிர்கட்சியும் செய்யாததிலிருந்து எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ விரும்புகிறார் என்பது தெளிவாக தெரிய வருவதாலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 10 வயது நிறைவடையும் தருவாயில் உள்ள ஒரு ஆண்குழந்தை இருப்பதை கருத்தில்கொண்டும், மனுதாரர் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்மனுதாரருக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டுகளை முழுவதுமாக தவிர்த்து விட்டு இனிவருங் காலத்தில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதுதான் அவர்களுக்கு பிறந்த குழந்தையின் எதிர்காலத்திற்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் தாக்கல் செய்த மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக ,**

1. **இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

K SRINIVASAN

Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:13:32 +0530

2. **மனுதாரருடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.**

இந்த ஆணையுரையானது என்னால் சுருக்கெழுத்து- தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ம் வருடம் மார்ச் மாதம் 09 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

K SRINIVASAN
Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:13:44 +0530

சார்பு நீதிபதி,
நாகப்பட்டினம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 திரு. தனபால் (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.10.2013 | திருமண பத்திரிக்கை | (அசல்) |
| ம.சா.ஆ.2 | | மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு | (சார்வு நகல்) |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

K SRINIVASAN
Digitally signed by K SRINIVASAN
Date: 2023.03.09 19:13:54 +0530

சார்பு நீதிபதி,
நாகப்பட்டினம்.